செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஅ] யாழ்ப்பாணம்:- நள ஸு வைகாசி மீ உஉ-ல வெள்ளிக்கிழமை (4-6-1976) [இல: கூ

திருக்கேதீச்சரத் திங்கள் : ஆனி.

## சைவப் பெருந் தலைவர்கள் நாயன்மார் - அறுபத்துமூவர்

### பிரமோத்சவ விழாவின் முன்

# பிரதிஷ்டை

(சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம் அவர்களின் உருக்கமான வேண்டுகோள்)

சைவத் தமிழ்ப் பொதுமக்களாகிய எங்களது இகபர வாழ்வுகளுக்கு வழிகாட்டிகளாய் இருப்பவர்கள் அறுபத்து மூவர் எனப்படும் நாயன்மாரேயாகும். அவர்களது நெறிதிறம் பா வாழ்க்கைத் திறனையும், வாழ்க்கையோடு ஒன்றுபட்டு நின்ற சிவதொண்டின் சிறப்பினையும் சைவ சமயாசாரியார் நால்வரும் தாம் பாடிய தேவார திருவாசகப் பாடல்களிற் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர். சைவசமயசாரியார்களுள் சுந்தரமூர்த்தி சுவாமிகளோ, அவர்கள் ஒவ்வொருவர் நாமத்தையுங் கூறி, அவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களது அடியார்களுக்கும் தாம் அடியவன் எனக் கூறிப் போந்தனர் சேக்கிழார் சுவாமிகள், அவர்களது சரிதங்களையே சதா சிந்தித்துத் தெளிந்து, கடைசியில நிஷ்டாநுபூதிநிலை பெற்றனர், சைவாகமங்களும், ஆசனம், மூலம், மூர்த்தி முதலியன

(வளர்ச்சி 2 ஆம பக்கம்)

## மகான்களைத் தேடிய மகான்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

கண்ணுக்கும் காணுகிறதன்மையுண்டு; காணாது. புறஒளியோடு கலக்கும்போதுதான் கண்ணுக்குக் காட்சி உண்டாம்.

இரவில் விளக்கொளியோடு கலந்துகாணுங் காட்சி அற்பமானது. விளக்கொளி கொண்டு சூரியனைத் தரிசிப்பது முடியாது.

விடிந்தபின் சூரிய ஒளியோடு கலந்து காணும் காட்சி சூரியனையே காண உதவுகின்றது.

'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்ற திருவாசகத்தை ஞாபகப்படுத்துகின்றது.

சூரியன் உதயமானதும் இரவு விளக்குப் பகல் விளக்காய்ச் செயலற்றுச் சும்மா கிடக்கும்.

X X X

கண்ணுக்குக் காணுகிற தன்மைபோல ஆன்மாவுக்கு அறிகிற தன்மையுண்டு; அறியாது. அருள் ஒளியோடு கலக்கும்போதுதான் அறிவு உண்டாகும்.

கண்ணுக்குக் காட்சி வருவிக்கும் புறஒளிகள் போலாகாது, அருள்ஒளி, புறம் உள் என்ற பேதமின்றி ஆன்மாவை ஊடுருவி எங்கும் வியாபகமாயிருப்பினும் ஆன்மா, அறியாமை இருளில் மூழ்கிக் குருடுபட்டுக் கிடத்தலால் அருள் ஒளியோடு கலக்கின்றிலது.

இரங்காமலிருக்கமாட்டாமையைத் தன்னியல்பாயுள்ள அருள் ஒளி, ஆன்மாவுக்கு மாயா யந்திர தநுவாகிய இந்தச்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## இவ் வாரச் சைவநிகழ்ச்சிகள்

—0—

வண் — சாந்தையர் மடம்

வருகிற வெள்ளிக்கிழமை (11-6-76) நடைபெறவிருக்கும். பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை — மகா கும்பாபிடேகத்தொடர்பில் பஞ்சமுக விநாயகர் திருவுருவம் 2-6-76 மாலை திரு த. கந்தசுவாமி ஆசாரியரின் இல்லத்திலிருந்து ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பெற்றது.

X X X

### திருப்புகழ் மாமன்றம்

4-6-76 வெள்ளிக்கிழமை மாலை 6-45 மணியளவில் நல்லை ஞான சம்பந்தர் ஆதீனமண்டபத்தில் "திருப்புகழ்மாமன்ற" அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

X X X

### சித்திரத் தேர்த் திருப்பணி

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் புதிய சித்திரத் தேரின் அடித்தளப் "பார்ப் பிரதிஷ்டை" மகாபிஷேகம் (9—6—76) புதன்கிழமை "கூர்மஜெயந்தி" நன்னாளிலே நிகழும் என தேர்த்திருப்பணிச் சபையினர் தெரிவிக்கின்றனர்.

X X X

### வில்லூன்றி நிகழ்ச்சிகள்:

தீர்த்தம்

வில்லூன்றித் தீர்த்தம் பாதுகாப்புச்சபை (19-5-76) கூடித் தீர்த்தப் புனரமைப்புப் பற்றி ஆலோசித்தது. சைவதர்ம வள்ளல் திரு கனகராசா அவர்கள் தொடக்கி வைக்கத் திரு. செ. சத்தியமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கிப் பதினெண்மர் பொலியும் நிர்வாகசபை தெரிவுசெய்யப் பெற்றது:— 6-6-1976 சிரமதானம் மூலம் தீர்த்த நிலையம் துப்பரவு செய்ய முடிவானது.

X X X

### வீரகத்தி விநாயகர் ஆலயம்

இவ்வாலயத்துக்கு வழிபடுவோர் உபயகாரர் சபை (23-5-76) ஆலய தர்மகர்த்தா கலாநிதி இ குமாரவடிவேல் அவர்கள் தலைமையில் உருவானது ஆலயநிர்வாகத்திலே வழிபடுவோரும் உபயகாரரும் போதிய பங்கு கொள்ளுதல் நன்று எனக் கூறிய தர்மகர்த்தா, நாவலர் பெருமான் தமது தருமங்களைப் பரிபாலிப்பவர்கள் நல்லூர் கைலாய பிள்ளையார் கோவிலிலே தங்கள் நேர்மை, உண்மை, நிதானம்பற்றிச் சத்தியஞ் செய்வதைக் கட்டாயப்படுத்தினர் என்று குறிப்பிட்டு, இவ்வாலயத்திலும அவ்வித ஒழுங்கு நடைபெற இருக்கின்றதென்று கூறினர்: ஆசிரியர் திரு, கார்த்திகேசு இதனை ஆதரித்துப் பேசியபின் பதினொருவர்

(வளர்ச்சி 3-ம் பக்கம்)

### இல்லச் சிறப்பை எடுத்துரைத்த

# சேக்கிழார் சுவாமிகள்

குருபூசை விழாவும் குறிக்கோட் சொற்பெருக்கும்

"இன்ப அன்பினை இடையறுது விளைவிக்கும் இன்றமிழ் மறை நூல் திருத்தொண்டர் புராணம் ஆகும்" எனத் தலைமை உரையிற் குறிப்பிட்டனர் திரு. சி. விசுவலிங்கம் அவர்கள்,

யாழ் இந்துக் கல்லூரித் திறந்தவெளி அரங்கில் நடந்த சேக்கிழார் விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திலகவதியாரைப் பற்றி சேக்கிழார் சிறப்பாகச் சொன்னவற்றை ஆதாரமாகக் கொண்டு பெரிய புராணத்திலே பெண்களின் பெருமை எவ்வாறு கணிக்கப் பட்டதெனச்சொற்பொழிவில் எடுத்தாண்டார்.

திரு. க, சிவராமலிங்கம் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான விழாவில் ஓர் பட்டி மன்றம் திருவாட்டி மனோன்மணி முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்றது. கல்லூரி மாணக்கர்கள் கலந்துகொண்ட இப்பட்டி மன்றம் பரிமளிப்பாக இருந்தது:

வண்ணைச் சிவன் ஆலயத்தில் இருந்து சேக்கிழார் சுவாமிகளின் திருவுருவப்படம் ஊர்வலமாக வந்த அமையம் பல மன்றங்களின் தொண்டர்கள் திருமுறைப் பாராயணம் புரிந்து வந்தனர். இவர்களுள் பண்ணிசை மணி வி, ரி சுப்பிரமணியம், திருப்பூங்குடி ஆறுமுகம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா முதலானோர் கலந்துகொண்டனர்.

— —

## 'சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்'

(வித்துவான் மு. கந்தையா B. A.)

[முன் வளர்ச்சி — 4]

'வேதத்தை நம்பாலவர் சாக்கியர்கள். எனவே அதிற் கூறப்பட்ட ஞானபாதம் கிரியாபாதம் என்பவற்றை ஏற்காமலும் சாக்கிய நாயனர் போன்ற ஒருவர் வாழ முடியுர,

குறித்த இரண்டும் சாக்கிய நாயனர் பற்றிய, நம் பூருவபக்கத்தார் குறிப்புகள் இவற்றையுஞ் சற்றுக் கவனித்தல் நம் தலைக் கடனாகும்.

நால்வர் இறைவன் திருவருள் விலாசங்கள் நன்கு புலப்படப் பதிகங்கள் இயற்றினர். மெய்கண்டார் பந்தமோக்ஷ இலக்கணங்கள் நன்கு தெளிவுபடச் சிவஞானபோதம் இயற்றினர். உண்மைகள் என்றுமுள்ளவையாதலின் இறைவன் திருவருள் விலாசங்கள் நால்வர்க்குமுன் இல்லாதவையாகா; அங்ஙனமே பந்தமோக்ஷ இயல்புகளும் மெய்கண்டார்க்கு முன் இல்லாதவையாகா நால்வர் பதிகங்கள் வெளியான பின் அவற்றின் வாயிலாகப் பின்னைய மக்கள் இறைவன் திருவருள் விலாசங்களை அறிந்து ஒத்துக்கொண்டார்கள் என்பது அதற்கு முன்னைய மக்கள் அவற்றை அறிந்ததுயில்லை; ஒத்துக்கொண்டதும் இல்லை என மறுத்ததற்காதாரமாதல் கூடுமோ? அன்றியும் குறித்த இருவகையியல்புகளையும் ஏற்காமலே முன்பு ஒருவன் சைவனாயிருந்தானெனில், திருவருள் விலாசத்தையும் பந்தமோக்ஷ இயல்பையும் ஏற்காத அந்தச் சைவத்தின் இலட்சணம் யாதாயிருந்திருக்குமோ? இனி, நால்வரையும் மெய்கண்டாரையும் ஏற்காத என்பது, சிவன் திருவருளை, சிவன் இலக்கணத்தை, அவனுபகாரமாகிய பந்தநீக்குதலும்,

(வளர்ச்சி 2 ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ வைகாசி மீ உ௨-௨ வெள்ளி

## திருப் பெருகும் திருக்கேதீச்சரத் திங்கள்

இவ்வாண்டின் பெருமைக்கும் புகழுக்கும் உரியதாக இலங்கத் திருக்கேதீச்சர மகா கும்பாபிடேகம் ஆனித் திங்களில் நிகழவிருக்கின்றது. வரலாற்று மகிமை பெற்றிருக்கும் இவ்வாலயம் சைவ மக்களின் நினைவில் நீங்காதிருக்கும் தகையதென்ற பான்மையில் ஆங்கு நிகழவிருக்கும் மகா கும்பாபிடேகம் மகத்தான தொன்றாகும். ஆகவே எதிர் வரும் திங்கள் திருக்கேதீச்சரத் திங்களாகக் சிறப்புப் பெறுகின்றது.

ஈழத் திருநாட்டிலே இறைநெறி முறையில் இலங்கும் திருக்கோயில்கள் யாவும் இங்குவாழ் மக்களுக்கெல்லாம் வாழ்க்கைக் குறிக்கோள்களாக விளங்குந் தகைமையினவாகையால் இம் மகா கும்பாபிடேகம் சைவ வுலகுக்கோர் தலை சிறந்த நிகழ்ச்சியெனலாம். ஆனித் திங்கள் முழுவதும் சைவ மக்கள் திருக்கேதீச்சரத் தியானம் செய்யும் உயர் நெறியில் ஈடுபட வேண்டியவர்கள். பல்லாயிரம் பல்லாயிரம் ஆக, அடியார்கள் பக்திப் பரவசத்தால் ஊக்கம் பெற்று மாதோட்ட வளநகரிற் பரவிய பாலாவிப் பழம் பதிநோக்கியவண்ணமாக இருப்பார்கள். எனவே இந்த மாபெரும் மக்கள் கூட்டம வளமாக வழிபாட்டு நியமம் அமைக்கவும் கும்பாபிடேக நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கவும் ஒழுங்குகள் உடனடியாகச செய்வதற்கு என்றும் அயராதுழைக்கும் திருப்பணிச் சபையாரும் சைவ சங்கங்களும் பொதுசன இயக்கங்களும் இப்பொழுதே செயலாற்றுதல் அவசியமாகின்றது.

போக்குவரத்து வசதிகளைச் சீராக்குவது முக்கிய நோக்கமாக வைத்து ஏற்ற எல்லா ஒழுங்குகளுக்கும் ஆயத்த வேலை அமைத்தல் வேண்டும்.

இப் புனித புண்ணிய திங்களிலே நாடோறும் அடியார்கள் திருக்கேதீச்சரத்துக்கு என்று பிடி அரிசியோ செம்பொன்னோ வெண் பொன்னோ சேமித்து ஈசன் திருப்பணிக்குச் சேர வைத்தல சிவ தொண்டாகும்.

## சிந்தனையைத் திருந்த வைத்துச்

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

மோஷமளித்தலுமாகிய பெறற்கரும் பேறுகளை ஏற்காத என்றே கொள்ளக்கிடத்தலின் சிவனை ஏற்காததொன்று சைவம் என்றிருந்த பூராயம் எவ்வண்ணமோ? என ஐயத்தின்மேல் ஐயம் விளைத்தலின் அவர்க்கு மேறபட்டவராகிய சாகியர் அவர்களை ஏற்காமலே சைவராயிருந்தார் என்ற வாதம் ஒருபொருட் பயனுமின்றிக் கழிவும் வெளியேற்றுரையேயா மென்க.

இனி, வேதத்தை நம்பாமை முதலாய சாக்கிய இயல்புகளெல்லாம் தம்மீடேற்றத்துக் கொவ்வாதெனக் கண்டுகழித்துக் காஞ்சியிலிருந்து தாம் புரிந்த ஆராய்ச்சி முடிவின் மூலம் சைவமே மெய்ப்பொருள் என்று துணிந்தவராகச் சாக்கிய நாயனுர் புராண நான்காஞ் செய்யுளிற் சேக்கிழாராலே தெரிவிக்கப் படுஞ் சாக்கியரை வேதத்தை நம்பாத சாக்கியரென கூறுமாறென்னையோ?

செய்வினையுஞ் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டது மட்டிலன்றி, இங்ஙனம் விளக்குமியல்பு சைவநெறியல்லவற்றுக் கில்லையென

## மகான்களைத் தேடிய மகான்

( 1-ஆம் பக்கத்து வளர்ச்சி )

சரீர விளக்கை உபகரிக்கின்றது. அதன்மூலம் தன்னோடு ஆன்மா கலக்க வழிசெய்கின்றது. அதனால் ஆன்மாவுக்கு அறிவு உதயமாகின்றது; சிற்றறிவு.

சரீர விளக்கால் அருள் ஒளிப்பிழம்பைக் காணுதல் இயலாது. காணமுயலுதல் விளக்கொளிகொண்டு சூரியனைத் தரிசிக்க முயலுதல் போலாம்.

சரீர விளக்குக்கொண்டு அருள் ஒளிப்பிழம்பைத் தரிசிக்க முடியாதாயினும்; சரீரவிளக்கில் நூதன விசேடமுண்டு.

X X X

சரீர விளக்கு விடியும்வரை உபகரித்தன் மாத்திரையில் அமையாது விடிவிக்கும் விளக்குமாம். விடிவித்தல் சரீர விளக்கின் நூதன விசேட இயல்பு.

சரீர விளக்கை எது உதவியதோ அது விளக்கைப் பயன்படுத்தும் விதியையும் வகுத்திருக்கின்றது.

விதிப்படி சரீர விளக்கைப் பயன்படுத்துபவர்களுக்கு அறியாமை இருள் விடிய, அருள் ஒளிப்பிழம்பாகிய சிவ ஞான சூரியன் உதயமாம். அப்போது சரீரவிளக்குச் செயலற்றுப் பகல விளக்காய் விடும். கணஒளி சூரிய ஒளியோடு கலப்பதுபோல ஆன்மா அருள் ஒளியோடு கலந்து அருள் ஒளிப் பிழம்பாகிய சிவஞான சூரியனைத் தரிசித்துச் சிவ மயமாகும்.

X X X

மாயா யந்திர தநுவாகிய சரீரவிளக்கின் இயல்பை உணர்ந்த மகான்கள் தமக்குக் கிடைத்த சரீர விளக்கைப் பயன்படுத்தும் முறையிற் பயன்படுத்திப் பரம்பொருளை அணுகும் வழியிற் சென்றுகொண்டேயிருப்பார்கள். "கதிப்பாற செல்ல ஏது நெறி" என்பதே அவர்கள் விசாரம்,

மகான்களைத் தேடித தேடி அவர்களை அணுகுவதிலேயே தம் வாணாளைப் பெரிதும் அர்ப்பணஞ் செய்த ஒரு மகான் திரு. க. இராமச்சந்திரா அவர்கள்.

## திருக்கேதீச்சரந் திங்கள் : ஆனி

(1-ஆம் பக்க வளர்ச்சி)

கற்பித்து, அவர்களைச் சிவாலயங்களிற் பிரதிஷ்டை செய்து சைவத் தமிழ் மக்கள் அவர்களைப் பூவும் நீரும் கொண்டு பூசித்து வாழவேண்டும் என விதித்திருக்கின்றன. எங்கள் ஈழநாட்டிற்கூட. தொன்றுதொட்டு இற்றைவரையும் வாழ்ந்து வந்த கோடானுகோடி சைவசமயிகளுள், அறுபத்துமூவரைப் பூசித்தும் பின்பற்றியும் வாழ்ந்தோர், சைவச் சான்றோர் எனப் பெயர்பெற்று. சைவக் குலமணி விளக்குகளாய் விளங்கி இருக்கின்றனர்

இவ் வுண்மைகளை நன்குணர்ந்த, திருக்கேதீஸ்வரத் தலத் திருப்பணிச்சபை அன்பர்களும், பிறரும, திருக்கேதீஸ்வரத் தலத்தில், அறுபத்துமூவர் பிரதிஷ்டை, பூசை விழா முதலியன வருகிற ஆண்டு பிரம்மோத்சவ விழாவின் முன்னர் எப்படியாயினும் நிகழுதல் வேண்டும என்ற ஆர்வத்தோடிருக்கின்றனர். சைவப் பெருங்கருவூலமாய் விளங்கும திருக்கேதீஸ்வரத் தலத்திலே, சைவப் பெருந்தலைவராகிய நாயன்மாரைப் பிரதிஷ்டை செய்து, எழுந்தருளுவிக்கும் பணி தேடக்கிடையாத பெருஞ் சிவபுண்ணியப் பணியாகும் ஈழம் வாழ் சைவமக்கள் எலலோருமே, இப்பணியிற் பங்குகொள்ளுதல் வேண்டும் என்பது எமது பிரார்த்தனை. முக்கியமாக சைவத் தமிழ் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் இப்பணியில் மிகுந்த அன்பும் ஆதரவும தருவார்கள் என எதிர்பார்க்கிறோம். 'அறுபத்துமூவர்'; மூர்த்திகள் வார்ப்புக்கு வேண்டிய செம்பு, பித்தளை, வெணகலம முதலிய பஞ்ச லோகங்களைத் தத்தம தாபனங்கள் மூலம் சேர்த்து உபகரித்து, எம்மையெல்லாம் இப் பணியல் ஊக்குவித்து, திருவருள் நெறிக்கு ஆளாகுமாறு வேண்டுகின்றோம

வும், அந்நெறித்தலைவனுன சிவனை மெய்ப்பொருள் எனவும் துணிந்தவரென்று அவர் புராணத்து 5ஆம் செய்யுளாற சேக்கிழாரால் எடுத்துககாட்டப் பெறும் சாக்கியர் ஞானபாதத்தை ஏற்காதவர் என்று கூற இவர்க்குமத்து வந்தவாறென்னையோ? பதி, பசு, பாசம இவற்றின தொடர்பு என்பவற்றைத் தெளிதற்கும் வேறாக, சிவனே உணமைப் பொருள என்று தெளிதற்கும் அங்கமாக ஞானமொன்றுள்ளதெனின் அதன் சுவரூபம யாதாகுமோ?

இன்னும், சிவலிங்கமே சுயஞ்சோதியான பரம் பொருளின அடையாளம என்று தெளிந்து நாடோறும் [illegible] நியமந்தலை நின்று, சிவ [illegible] கண்டது கண்டமாதத்ரத்தே

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## சிதம்பரத்தில் சேக்கிழார் திருநாள்

2—6—76 புதன் கிழமை சிதம்பரம் ஞானப்பிரகாசர் குளம் வடகரையில் எழுந்தருளி இருக்கும் சேக்கிழார் சுவாமிகளுக்குக் காலையில் 9—30 மணி அளவில் குரு பூசை வழிபாடும் மாலை 4 40 மணிக்கு சேக்கிழார் பிள்ளைத் தமிழ் 10 செய்யுட்கள் இசையுடன் ஓதுதலும் பின்னர்ச் சொற்பொழிவும் 7 மணிக்கு வீதிவலமும் நடைபெற்றன.

## ஸ்ரீ உமாபதி தேவரின் ஒப்பற்ற சித்தாந்த ஞானம்

( முன் வளர்ச்சி - 2 )

ஸ்ரீமறைஞான சம்பந்த தேவர் "பாவு தோய்ந்த கூழ் போதும்கொடு" என்று கூறி விட்டு ஸ்ரீஉமாபதி தேவருடன் கூடியிருந்த ஸ்ரீமறைஞானசம்பந்த தேவர் இரண்டு கரத்தினாலும் பாவு தோய்ந்த கூழை வாங்கிப் புசிக்கும் போது முழங்கை மூலம் மிஞ்சி ஒழுகிய "எச்சிற் கூழை" பூமியில் சிந்தாதபடி ஸ்ரீஉமாபதி தேவர் தன்னுடைய இருகரத்தினாலும் ஏற்று "மகாகுரு பிரசாதம்" என்று பாவித்து புசித்துவிட்டார், ஸ்ரீஉமாபதி தேவர் எச்சிற்கூழைப் புசித்து விட்டதும் குருச்ஷ்கர்களென்ற பாவனை நேர்ந்து விட்டதைப் பார்த்த உடனே, ஸ்ரீமறைஞானசம்பந்த தேவர் ஸ்ரீஉமாபதி தேவருக்கு ஞான உபதேசம் புரிந்துவிட்டு இருவர்களும் பிரிந்துவிட்டார்கள்,

ஸ்ரீ உமாபதிதேவரின் ஆனித் திருமஞ்சன துவஜாரோகணமுறை நாள் வந்து விட்டது; தில்லைவாழந்தணர்கள் கூடி உமாபதிதேவ[illegible] ஜாதிபிரஸ்டம் செய்து அவருக்குப்பதிலாக மற்றொரு தில்லை வாழ் அந்தணரைக் கொண்டு துவஜாரோகணத்தை நடத்த முற்பட்டார்கள், தில்லைவாழந்தணர்களின் முடிவின்படி மற்றோர் தில்லைவாழந்தணர் துவஜாரோகண கொடிச்சீலையைக் கொடிமரத்தில் உயர்த்த கொடிச் சீலைஉயர ஏறாது கீழ் அறுந்து விழுந்துள்ளது, இச் சம்பவத்தை தில்லைவாழந்தணர்களும, தரிசனம் செய்வதற்கு வந்து சூழ்ந்திருந்த் மக்களும் பார்த்து பெரிதும் வருந்தினர்

மானிட அவதாரத்தோடு ஸ்ரீநடராஜ மூர்த்தி தோன்றி அசரீரியாக "கொற்றவன்குடியில் இருந்து கொண்டுவரும் எமது அடிமைத் தொண்டனுகிய உமாபதியாருடைய பூஜை பெட்டகமான கோயிற் புராணத்தின்கண் எழுந்தருளி அங்ஙனம் செய்கின்ற பூஜை ஆராதனைகளைபெற்று எழுந்தருளியிருக்கின்றோம். அவரைக் கொண்டுவந்து அவருடைய முறைப்படி துவஜாரோகணம் நடத்திவிராகல் கொடி யேற்றப்படும் என்று திருவாய் மலர்ந்தருளி உடனே மறைந்து விட்டார் அந்தக்கணமே தில்லைவாழந்தணர்கள் நித்திரை செய்து விழித்தவர்களைப் போல் சரீரமுழுதும் உரோமஞ் சிலிர்ப்ப, நெஞ்சம்

வளர்ச்சி 3 ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனையைத் திருந்த வைத்துச்

( 2 ஆம் பக்கத்து வளர்ச்சி )

தம் வசமிழக்கும் கழிபேருவகையினல் மலர்ந்து, பரவசத்தால் கல்லே மலராக அர்ச்சித்து வந்தாரென அவர் புராணத்தில் 8 முதல் 12 இறுதியான செய்யுள்களால் விளக்கிப் பின் 13 ஆம் செய்யுளில், 'அன்னிய மெய்யன்புடனே எழுந்தவினை தூயவர்க்கு மன்னுமிகு பூசனையாம அன்புநெறி வழக்கினல்' என அமைதியுங்கூறிச் சேக்கிழாராலே பிரதி பாதிக்கப்பட்ட சாக்கியரைக் கிரியாபாதத்தை ஏற்காதவர் என்று இளக்க முனைந்த மதிமோசந்தான் யாதோ?

சிவபூசையே செய்து சிவலிங்கத்தால் முத்தியடைந்தார் என்ற கீர்த்திக்குளான சாக்கியரைக் கிரியா பாதத்தை ஏற்காதவர் என்று கூறி நலலறிஞரின் நகைப்புக்கிடனுக நமக்கு அப்படி என்ன வந்துவிட்டது என்றே கேட்கின்றோம்.

இவ்வாறருல் சாக்கியர் பற்றிச் சம்பந்தப்பட்ட நம் பூருவபக்கத்தார் கூறியனவும் பொருளில் வெற்றுரையேயாம். அது பொருட்பயனில்லாப் பொய்ம்மொழி எனினும் ஒக்கும்

இனி, பொதுப்படையான் நோக்குமளவிலேயே பெரிய புராண அன்பர்கள் அனைவரும் ஞானபாதத்தவர்கள் என்பது நன்கு புலனுகும். பெரியர் என்ற பெயர்ப்பொருளும் அதற்கு வலுவூட்டுவதாகும். நீத்தார்களே பெரியர் ஒன்கின்றது திருக்குறள். செயற்கரிய செய்வார் பெரியர் என அவர் பெரியராதற் காரணமும் அதுவே கூறுகின்றது. செயற்கரியவாவன இயமம் முதலாகிய யோக சாதனங்கள் என்பர் பரிமேலழகர். சேக்கிழார் இவர்களின் இயல்பு கூறும்போது 'இருமையுங்கடந்து நின்றார்', 'பொய் கடிந்தறத்தின் வாழ்வார்', 'சேணிடையுந் தீங்கடையார், 'ஞானவரம்பின் தலைநின்றார்' என்றாற் போன்ற தொடர்களினுல் அவரைக் குறிப்பிடுவர். இவ்வெல்லா வகையாலும் அவர்கள் ஞானபாதத்தில் நின்றவர்கள் என்னுமுண்மை வலுவுடைத்தாகும். அவர்கள் அனைவரும் முத்திப்பேற்றுக்கு அருகதையுடையராயிருந்த அந்நிலைமையும் அவர்கள் ஞானபாதத்தவர்கள் என்பதையே வற்புறுத்துவதாம. எங்ஙனமெனில், 'சரியை கிரியைகள ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்' என மெய்கண்டார் தெரிக்கும் ஏதுவகையாலெனக. இங்ஙனம் தெட்டத்தெளிய ஞானநிலையில் அதனுட் பகுதிகளாகிய ஞானத்திற் சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தல் யோகம, ஞானத்திலஞானம் ஆதியவற்றைத் தழுவுகின்றவர்களாகிய அவர்களைக் குறித்து, இன்னா வேதத்தை ஒப்பவல்லை, இன்னர் கிரியையில் நிற்கவில்லை, இனனர் சடங்குகளைத தழுவவில்லை, இன்னர் ஞானபாதத்திற் பற்றவில்லை எனறிங்ஙனம புரியும ஆராய்ச்சிகள், உரைகள் அததனையும் முற்றும் பயனற்ற வெறுந்தொழில்கள என்கை யாம அவசியம் உணர்ந்து கோடறபாலதாம். என்னை? அவர்கள் நின்றநிலை இவையெல்லாவற்றையுங் கண்டு கழிதது அதீதப்பட்ட நிலையாகலின் என்க.

இன்னும நப்பூருவபக்கத்தார் கருத்துக்களில் ஒன்றை ஆராய்ந்து இக்கட்டுரைக்கு முடிவுகாண்பாம், 'மூனருவதாக, வெறும சடங்குகட்டும் கிரியைசட்கும் முக்கியத்துவந் தருதல் கூடாது. திருநீற்றையும் திருமுறைகளையும்விட அகத்தையும் புறததையும தூய்மை செய்ய வல்லது வேறு எதுவுமஇலலை எனபதை உண்மையில் நம்பினுல் சடங்குகட்கு இடமெங்கே?

''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோததிரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்'
5 - 60 - 3

"கங்கையாடிலென் காவிரி யாடிலென்
ஒங்குமா கடல் ஓதநீர் ஆடிலென்
எஙகுமீசன் எனுதவர்க்கில்லையே'' 5 - 99 - 2.

"வேதம் ஓதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதிநூல்பல நித்தல் பயிற்றில் என்" 5-99-4.

இக் கூற்றில் உள்ளபடி, சாஸ்திர அனுசரணை தீர்தத ஸ்நானம, வேதமோதல், வேள்வி செய்தல் நீதிநூல் பயிற்றல் என்பனவெல்லாம் வெறுஞ் சடங்குகளென்றும இவர் காட்ட முனைகின்றார் எனத் தெரிகின்றது. இவர் கருத்தின் பொருந்துமாற்றைப் பற்றிச் சற்று விசாரிப்போமாக.

— தொடரும்

### குருபூசை

திருவருமை ஆதீனம் 26-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தில் சித்திரை ஹஸ்த நக்ஷத்திரத்தன்று உமாபதி தேவரின குருபூசை விழாவைச் சிறப்பாக நடத்தி வைததார்கள,

### ஸ்ரீ விநாயகர் கோயில்

யாழ். அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் மகா சங்குசாபிடேசத் தருவிழா 2-6-76 புதன்கிழமை நிகழ்நதது. பகல் திருவிழாவிலும் இரவு விழாவிலும் ஏராளம் அடியார்கள் கலநதுகொண்டனர். ... இளைஞர் இந்துமாமன்றத்தினரும், யாழ். திருமுறைமன்றத்தினரும் பஜனை நிகழ்த்தினர்,

## சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

மேலைத் தேசத்தவர்கள் விஞ்ஞான மட்டற்ற விருத்தியினுலும் மிதமிஞ்சிய சுக போகங்களாலும் மனச்சாநதி மனத்திருப்தி மனநிம்மதி இல்லாமல் கீழைத் தேசத்தை நாடுகிறுர்கள். மனச்சாந்தியையும் மன நிம்மதியையும் பெற இந்தியாவையே நோக்கிய வண்ணமாகப் பலர் இருக்கிறுர்கள், ஆகாய விமானத்தில் விண்வெளியாக அங்கும் இங்கும் உல்லாசமாகப் பறந்தும், காரோட்டியும பயனில்லை என்று சிலர் உணர்ந்துவிட்டார்கள் ஒருசிலர் நல்லாய் யோசித்து உணர்ந்துவிட்டார்கள். அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் ஏற்றிய ஞானச்சுடர் இட்ட ஞான வித்து இப்போ முளை கொண்டு வளர இடம் பெற்று விட்டது. அமெரிக்காவில் ஒரு சிலரும், ஐரோப்பியரில் ஒரு சிலரும் தமது உடை நடை பவனைகளை இந்தியர்களைப் போல் மாற்றிக்கொண்டே இருக்கிறுர்கள். மிதமிஞ்சிய செல்வச செழிப்பினுல் புண்பட்ட சிலர் தமது மனதிற்குச் சாந்தியைக் கொடுக்கக்கூடிய மர்மமான சக்திதான் யாதோ? அவர்கள் இந்தியா, இலங்கை முதலிய ஆசிய நாடுகளின் வாழ்க்கையில் தன்னிகரில்லாப் புதிர் ஒன்றை, காலத்தினுலும் பல சிக்கலான சமபவங்களினுலும் குன்றாத ஓர் ஒளியை, ஓர் அற்புத ஞான பொக்கிஷமாகும் புதையலை, உண்ண உண்ணத் தெவிட்டும்பிழிந்து இதுதான் வேதநெறி மனத்தில் ஊறும் தேனைக் காணவும் சுவைக்கவும் இந் நாடுகளை நோக்கி வந்து கொண்டிருக்கிறுர்கள். கீழைத் தேசத்தவர்களின் சரியையில், கிரியையில், மூச்சில் சமயம் உண்டு. ஆசியாத் தேசங்களின் மக்கள் வாழ்க்கையில் ஓர் பரம இரகசியமான வாழ்க்கைக் குண விசேடத்தை (Quality of life) அவர்கள் காண்கிறுர்கள. வேத ஆகமங்கள் தோன்றியது இநதிய நாட்டில் அவை பொன்னிலும் மணியிலும் பார்க்கப் போற்றிப் பேணிக் காக்கப்பட்டது

இந்திய நாடு அங்கிருந்து உலகமெங்கும் அவற்றின் ஒளி பரந்தது. வேத ஆகமம் இந்தியாவற்குப் பொதுச்சொத்து என்றுலும் அவை வேரூன்றி நிலை கொண்டது தென்னுடாகிய தமிழ்நாட்டில். திவ்விய வேத நெறியும் சைவ நெறியும செழிப்புற்று விளங்குவது தென் திசையில், "தென்னுடுடைய சிவனே போற்றி' என்று மாணிக்கவாசகரும் ''மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத் தொண்டத் தொகைதர'' எனவும், இந்த மானுடப்பாற்படு தென்திசை இந்த வான் திசை எட்டினும் மேற்பட வந்த புண்ணியம் யாதென'' என்று திருமலைச் சிறப்பில தெய்வச் சேக்கிழார் சுவாமிகளும தென் திசையை மிகவும் பாராட்டிக் கூறியுள்ளாகள். வேத சாரததைப்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் விண்ணப்ப கோட்டில் மன்றத்தில்

வழ. இல 6428A

1. ஐயம் பிள்ளை விஸ்வலிங்கம்.
2. ஐயம் பிள்ளை சுவாமிநாதன்.
3. ஐயம பிள்ளை முத்துத்தம்பி எல்லோரும் உரன்குளை ஏளாலை.

எதிராக வழககாளிகள்

1. இலங்கையன் ஆசைப்பிள்ளை.
2. மபண் முத்தி
3. கத்தன் மாணிக்கன் எல்லோரும் கட்டுவன் எதிராளிகள்

மல்லாகம் விண்ணப்ப கோட்டின் 6428 A ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1976 ம் ஆண்டு ஆடி மாதம 5ம்திகதி (5 7-76) திங்கட்கிழமை முற்பகல் 10,00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்க்கபபடும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 696-67 சதமும் 28- 0-69 தொடக்கம் 4-7-70 வரைக்கும ரூபாய் 500-00 க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுககும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 5 -25 சதம். இதில் ரூபாய் 300-00தீர்வைத் தொகையிலும் கோட்டிச் செலவில் ரூபாய் 40-00 ம் கழிபடவேண்டும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் வலிகாமம் வடக்குப் பிரிவு தெல்லிப்பளை கோவிற்பற்று கட்டுவன் இறை ,, நரிக்குடிய வளவு,, பர-நில-இலா. 2 பனைகளும மாமரமும மேற்கெல்லையில் நிற்கும் வேப்பமரத்தில் பங்கும். வீடும், இதற்கெல்லை கிழக்கு கந்தன் பெண் வள்ளியினுதனம் வடக்கு மூத்தான் பெண் தேய்வியினுதனம் மேற்கு வினசி பெண் தெய்வியினுதனம். தெற்கு கணபதி முருகனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

அ. போ எதிர்மன்னசிங்கி
கொமிஷனரும விலை மதிப்பாளரும்.

14 டேவிட்ரோட்
யாழப்பாணம், 12-5-76,

14 4-76

## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் கரம்பன் ஊர்காவற்றுறையில் அடைவு பிடிக்கும் திருமதி சிவகலை கனகரத்தினம் அவர்களின் அடைவு கடையில் 31 3-1974 வரை அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னுல 1976 ம் ஸ்ரீ ஆடிமீ 21 ம திகதி புதன்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
ஏல விற்பனையாளர்
Auctioneer,

துன்னுற்கம்
காரைநகர், 2-6-1976.

எம். 10, 4, 11-6-76

## இவ்வாரச் சைவ

1 ஆம் பக்க வளர்ச்சி

கள் கொண்ட ஆலோசனைக் குழு தெரியப்பட்டது.

மயானம்

வில்லூன்றி (இந்து) மயானம் தொடர்ந்து இந்து மயானமாகப் பரிபாலிக்கப்படுதல் வேண்டுமென்ற நிபந்தனைப்படி வெகுவிரைவில் யாழ். மாநகரசபையிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது;

### திருமணங்கள்

மிகப் பொருத்தமுள்ள இல்லற இணைப்புக்குரிய முழு விபரம் பெற 15 சத முத்திரை ஐந்து அனுப்புக.

தி. சுப்பிரமணியம்,
சர்வ உதய சேவை,
சிதம்பரப்பிள்ளை இல்லம்
சிதம்பரப்பிள்ளை வீதி,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

யும் சைவநெறியும் நன்னெறியும் என வாழ்ந்துகாட்டிய உத்தம அடியார்கள் தென்திசையில வாழ்ந்தார்கள். அவர்களின் சரித்திரங்களைத்தான் பெரிய புராணம் செப்புகிறது. அவர்களிற பலர் இல்லற ஞானிகள். காட்டிற் சென்றும மலைக்குகைகளிற் வசித்தும் ஐம்புலன்களை அகத்தடக்கியும் தவம் செய்யவில்லை. ஆனல் அவர்கள் அகண்டாகாரசச்சச்சிதானந்தராய் உயிருக்குயிராய், அறிவுக்கு அறிவாய் உள்ளம்கவர் கள்வனுய் தோன்றுத் துணையாய் எங்கும் வியாபித்திருக்கும் சிவபரம் பொருளாய் அந்தரான்மியாய் நின்று இயக்கும் இறைவனை கள்ளம் கபடமற்ற தூய அன்போடு வணங்கும் இயல்பினை உடையவர்களாக விளங்கினர் இயற்கை அன்னையோடு ஒன்றுபட்டுப் போதும் என்ற மனமே பொன் போலும் மருந்து என்று நினைந்து பூரண மனத்திருப்தி அடைந்து விண்ணுலகும மண்ணுலகும் எம் பெருமானின் அருள் ஆட்சி என நினைந்து வாழ்ந்தார்கள் அவர் தன்னை அறிந்து தத்துவ தரிசனம் பெற்றுத் திருவடி அடைந்தவர்கள,

— வளரும்

## ஸ்ரீ உமாபதி தேவரின்

2 ம் பக்கத்து வளர்ச்சி

திடுக்கிட, ஒவ்வொரு தில்லை வாழந்தணர்களும் பின்னர் மனம் தெளிவடைந்து, ஒருவரை மற்றொருவர் பார்த்து, நாம் உமாபதிதேவரை சாக்ஷாத் நடராஜமூர்த்தி என்று தெரியாமல கோயில் இருந்து நீக்கி, இதர தில்லை வாழந்தணரைக் கொண்டு துவஜாரோகணம் நடத்தியது குற்றமல்லவா என்று எல்லோரும சேர்ந்து இரத்தின பீடமான சிம்யாசனத்தை எடுத்துக் கொண்டு நாதசுர வாத்தியங்களோடு, முத்துச் சிவிகை முதலான அநேக சம்பிரதாயங்களுடன் தில்லைவாழந்தணர்கள் கொற்றவன் குடியில் வீற்றிருக்கின்ற ஸ்ரீ உமாபதிதேவரின் திருமுன் சென்று நமஸ்காரங்கள் செய்து கொண்டு நிற்க, ஸ்ரீ உமாபதிதேவர் திருநோக்கஞ் செய்து இங்ஙனம், நீங்கள் வரலுற்றது யாது காரணம என்று வினவினுர்கள்.

— வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

பிறையுள் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாள் கொண்டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறை அறிவோம் என்பர், நெஞ்சிலர் தாமே.

People incapable of realizing the nature of the blue-throated Lord pretend to know what perfection is. They have no common sense (or conscience). They resemble mock-heroes (bravos who unsheathe their be-jewelled swords to kill an imagined hare in the moon.

Hindu Organ

FRIDAY JNNE 4, 1976

## All For Redress And That's All

POLITICAL problems there are, all the world over. So it is in our little Island also. The question of the Minorities has been raised ever since the time of the introduction of the Manning Reforms. It became a permanent problem after the British gave up their authority here. Different proposals have been made at various times without any lasting solution being reached. Agreements between Premiers and Presidents of Tamil Political Parties were concluded but not pursued to their logical conclusion. And that is the history of the problem of the Minorities.

Naturally unresolved problems would always lead to complications. Such a stage in this affair seems to have appeared. However, in this serious situation, the leaders of the different parties including the Ruling Front express the view that the problem needs solving and that a solution is quite possible. This is but paradoxical. The opinions may perhaps be well intentioned but unfortunately look ridiculous when they are allowed to remain mere expressions. If only some non political group or a conference of cultural and religious association would endeavour to paraphrase the views of political parties and find out the highest common factor of agreement then a practical move can be sponsored by such conference to have immediate talks with a view to arriving at a feasible formula to get the different political groups together for the purpose of effecting concrete suggestions.

It must be remembered that a centum for centum agreement cannot be reached in such political discussions. But the organizers must be so tactful as to frame the main issues and to resolve them at the irreducible level of collaboration.

We are particularly interested in this national effort as no country can hope to reach a high standard of religious consciousness and cultural practice unless there is established a fair politically peaceful background. It is now for non-political leaders particularly religious and social workers to take up this suggestion.

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-1-1973 with Mr. Sanmugam Mahadeva of 65 Main Street Jaffna on Friday 18-6-1976 commencing at 9-30 a. m. at the said pawn shop.

"Raja giri"
643, K. K. S. Road
Jaffna

V. S. Cuttipillai
Auctioneer.
(2 28 & 4)

# Sir Waitialingam Duraiswamy

*The Statesman, Lawyer, Educationist and Culturist*

By Dr. S. Thananjayarajasingham,
Head, Department of Tamil and Hindu Culture,
Vidyalankara Campus

Sir Waitialingam Duraiswamy was born on 8th of June 1874. He received his early education at Jaffna College and Jaffna Central College. He identified himself with all the activities of the school. In the field of sports, he excelled himself and was awarded thirteen of the fourteen prizes in athletics during a particular year. He was a talented swimmer, an excellent marksman and a good horse-rider. He graduated from the Calcutta University in 1897 and obtained double honours in science and mathematics. His teachers at the University included Sir P. C Ray and Jagdish Chandra Bose. He later read law at the Ceylon Law College and took his oaths as an advocate in 1902.

Every institution is the lengthened shadow of a great man and this is especially true of the magnificent institutons Sir Waitialingam Duraiswamy founded and ably administered. In 1906, he was founder and first secretary of the Jaffna Association, which, like the Ceylon National Congress and the Chilaw Association, was created to promote the political advancement of Ceylon in general and Jaffna in particular. In 1924 he was founder and organiser of the Hindu Board of Education and was its first secretary. Sir Ponnambalam Ramanathan was its first President and on his resignation he succeeded him as President. In 1923 he founded a Hindu English School at his native village of Araly. He was also the President and the General Manager of the Jaffna Hindu College and affiliated schools He served on the University Commission, which recommended the present site at Peradeniya for its new campus. Following the footsteps of Arumuga Navalar and Sir Ponnambalam Ramanathan he championed the cause of education with a denominational bias. His main concern was to satisfy the educational needs of the vast mass of unsophisticated people living in the rural areas. Under his dedicated and able management more Hindu Schools, training colleges and orphanages sprung up. It was during his time as General Manager that the present Jaffna Hindu Ladies' College was started and his speech by which this venture was begun is still remembered for its high thinking and deep philosophy.

As a Statesman and Educationist he realised the pitfalls inherent in a situation where the two major communities had played a significant role in the Island's history; he, therefore, boldly advocated the teaching of Sinhalese and Tamil in all schools in the Island and emphasised that such a step would help eliminate any trace of communalism and assist in building a united Ceylonese nation. If the advice of this far sighted patriot had been followed, history would have taken a different turn and greater communal harmony will prevail today.

As a Jaffna man he possessed a distinctive culture and was the embodiment of dignity and decorum. The chief element of Hindu Culture and tradition are, working for the common weal of everybody and the subordination of looking after of ones own interest to the care and welfare of the community at large. As a loyal disciple of Yogar Swami the sage of Jaffna, he came under this benign influence and was motivated in his actions by high ethical principles.

(To be continued)

## AUCTION SALE

All the unredeemed Jewelleries pawned with Mrs. Sivakalai Kanagaretnam Licensed Pawn Broker of Karampan, Kayts till 31 3-1974 will be sold by me by Public Auction at the said Pawn Shop on Wednesday, 21st July 1976 commencing at 10 a m.

V. Erampamoorthy
Licensed Auctioneer.
Karainagar
2 6-76
3. 4 & 11)

## Ramanathan Jayanthi

Great as the occasion is, several commentaries on the characteristics of the life and works of the Great Man have been published during this Jayanthi year.

Here is one such publication:

The contribution of Sir Ponnambalam Ramanathan to the study of comparative Religion—S. Ambikaipakan B A.

Being a reproduction of the paper read at the South Asia Studies Seminar — University of Sri Lanka—Jaffna Campus on 22-12-1975, the contents have both academic and topical interest.

The comparative study of religious truths and tenets can attract only scholars who have a sufficient spiritual learnings. Sir Ramanathan has been classified as a beautiful blend of classical scholarship, enlightening experience of spiritual insight, legal learning acumen, and sagacious statesmanship, In other words a Pundit *par excel ence* (Pundit: a Hindu learned in Sanscrit in philosophy, religion and jurisprudence of India — **(Oxford Concise Dict)** Hence Sir Ramanathan's study of several religious scriptures and reflections thereon.

Mr Ambikaipakan. devoted as he is to the study of the writings of men of learning, has aptly directed his mind to the pleasant hobby of analysing the inferences of Sir Ramanathan in his various commentaries In this paper, Mr. Ambikaipakan has endeavoured to explain in a nutshell the Vedanta and Siddhanta concepts and correctly says that Sir Ramanathan could be said to be the first Siddhanta devotee to write on the Gita and the New Testament.

Here is a comprehensive study of Sir Ramanathan's commentaries compiled in the study-circle style. This publication will prove useful to students of religious philosophies at the college and the university levels.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday June 4, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org